பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 – 2024

## மானியக் கோரிக்கை எண். 9

**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 8 |
| 3. | கல்வி | 19 |
| 4. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 21 |
| 5. | கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் | 34 |
| 6. | இலவசக் கல்வி உதவித் தொகை | 47 |
| 7. | அரசு பள்ளிகளில் பயின்று 7.5 % இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ / மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல் | 53 |
| 8. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 54 |
| 9. | இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 56 |
| 10. | விடுதிகள் | 58 |

| | | |
|---|---|---|
| 11. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 75 |
| 12. | விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல் | 77 |
| 13. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 80 |
| 14. | விடுதி கட்டடங்கள் பராமரிப்பு | 81 |
| 15. | சீருடைகள் வழங்குதல் | 82 |
| 16. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 84 |
| 17. | இலவச வீட்டு மனை வழங்குதல் | 90 |
| 18. | சீர்மரபினர் நல வாரியம் | 91 |
| 19. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 97 |
| 20. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் | 104 |
| 21. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 108 |
| 22. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 110 |
| 23. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 114 |
| 24. | இணைப்பு | 127 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு - 2023-2024

## முன்னுரை

“தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு”

- குறள் 212

தமிழ்நாடு, சமூகநீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் வளங்களை அணுகுவதற்கும், வளங்களில் உரிய பங்கினை பெற்று முன்னேறுவதற்கும் இவ்வரசு உறுதுணையாக உள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் ஒருங்கிணைந்த சமூக, பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்காக இத்துறை பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் நலனுக்காக அரசு தீட்டும் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககமும், 1989 ஆம்

ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககமும் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சேர்ந்தவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் போன்ற நிலைகளில் தங்களது நிலையினை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் அளிப்பதையும், சமுதாயத்தில் உள்ள இதர பிரிவினருக்கு சமமான நிலையினை அனைத்து துறைகளிலும் அவர்கள் அடைவதையும் இலக்காக கொண்டு, தமிழ்நாட்டின் தனித்துவமான கொள்கையான இடஒதுக்கீட்டு கொள்கை 1921 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது. இக்கொள்கை, மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கிய

பங்காற்றியுள்ளதுடன், இம்மக்களின் வாழ்வில் நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் ஏற்படுத்தி உள்ளது.

இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்திற்கான அவர்களது பங்களிப்பை உறுதிசெய்வதிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. கல்வியே ஒருவருக்கு அழிவில்லாத செல்வமாகும் என்ற கருத்தை நன்கு உணர்ந்த இவ்வரசு இவ்வகுப்பினரின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவ்வகுப்பை சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், இலவச கல்வி- பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு / தொழில்நுட்ப கல்வி, இலவச மிதிவண்டிகள் வழங்குதல், இலவச சீருடை

வழங்குதல், இலவசமாக தங்கி பயில விடுதிகள் ஏற்படுத்தி தருதல் ஆகிய திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. பிரமலை கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாததாகும்.

இதனை நன்கு உணர்ந்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் இப்பிரிவு மக்களுக்கு சுயதொழில் துவங்க கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் கீழ், இவ்வகுப்பை சார்ந்த ஏழை, எளிய மக்களுக்கு பித்தளை சலவைப் பெட்டிகள் மற்றும் மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைய காலமாற்றத்தை கருத்தில் கொண்டு, ஆயத்த ஆடை அலகுகள் (Readymade Garment Units) அமைப்பதற்கும், நவீனமுறை சலவையகங்கள் (Modern Laundry units) அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கும்

திட்டங்கள் புதிதாக வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வீடற்ற இவ்வகுப்பை சார்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வரசால் 2007-ஆம் ஆண்டில் சீர்மரபினர் நல வாரியமும், 2008-ஆம் ஆண்டில் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியமும் ஏற்படுத்தப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2015-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொது அவையால் உருவாக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (Sustainable Development Goals), இலக்கு-1 (வறுமையை ஒழித்தல்), இலக்கு-4 (தரமான கல்வி) இலக்கு-10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியன

இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இத்துறை தொடர்ந்து செயலாற்றும்.

## 2. இடஒதுக்கீடு

சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் இப்பிரிவு மக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் அரசு பணிகளில் நியமனம் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கான இடஒதுக்கீடு கொள்கை தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. மாநிலத்தின் மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 88 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளனர்.

இடஒதுக்கீட்டின் அளவு பல்வேறு காலங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீடு மாநிலத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் இடஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | பிரிவு | இடஒதுக்கீடு விழுக்காடு |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| 3. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | 20 |
| 4. | ஆதிதிராவிடர் | 18 |
| 5. | பழங்குடியினர் | 1 |
| | மொத்தம் | 69 |

இந்திய அரசமைப்பு சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ

அரசாணை" என்று அழைக்கப்பட்ட பல்வேறு பிரிவினர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் ஆணை செல்லாது என உச்சநீதிமன்றத்தால் 1951 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வழி நடத்திய பெருந்திரளான எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்பு சட்டத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட்டு முதல் அரசமைப்பு சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது. பல நூற்றாண்டுகளாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்கள் கல்வி, சமூக, மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு

அடைவதற்கான சமூக நீதிப் போராட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை எனப் போற்றப்படுகிறது.

1992 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் இந்திராசஹானி (மண்டல் குழு) வழக்கில் இடஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சட்டம் 45/1994 நிறைவேற்றப்பட்டது. பின்னர் அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 31-பி - யின் பாதுகாப்பு பெறும் பொருட்டு, இச்சட்டம் இந்திய அரசமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப்பணிகளில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பேணிகாத்திடவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் நீங்கலாக, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

சிறுபான்மையின சமுதாயத்தினரின் தனி இடஒதுக்கீடு கோரிக்கைகள் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து

பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 33/2007) 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. இச்சட்டம் 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை 2021-2022 ஆம் கல்வியாண்டில் இருந்து வழங்க,

ஒன்றிய அரசு முடிவு செய்தது. இதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை ஒன்றிய அரசு 2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்ததில் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார்கள்.

ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு வழங்கும் போது "வளமான பிரிவினரை" (Creamy layer) நீக்கம்

செய்யும் கொள்கையை இவ்வரசு எப்போதும் எதிர்த்து வருகிறது. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் வலியுறுத்தி வந்தவாறு, பொருளாதார நிலையை அளவுகோலாகக் (Creamy layer) கருதாமல், சமூக நிலையை மட்டும் கருதி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒன்றிய அரசின் பணிகளிலும், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பெற வழிவகுக்கும் வகையில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

ஒன்றிய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு

வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS ஆகிய உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

அனைத்து சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான முழுமையான சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து நடத்திட

தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசு பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்கிறது. மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டின் அளவு வேறுபடுகிறது. எனவே மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு விழுக்காட்டை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதற்கேற்ப இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம்

செய்யுமாறு ஒன்றிய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசுப் பணிகளில் நியமனங்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. அரசு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக வரிச்சலுகை போன்று பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்தப் பயன்கள் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கும் சென்றடையும் விதத்தில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு அவசியம் என கருதப்படுகிறது.

இந்திய அரசமைப்பு சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டு வந்தால் மட்டுமே தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வழங்க இயலும். இந்நோக்கத்தை அடைவதற்கு தேவையான அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டு வர இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

### 3. கல்வி

“யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.” - குறள் 397

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. மேலும், சமூகத்தின் வளர்ச்சியை அளவிடும் அளவுகோலாக கல்வி விளங்குகிறது. எனவே இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மக்கள் கல்வியில்


முன்னேற்றம் அடைவதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி இம்மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக செலவிடப்படுகிறது. இவ்வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் நலனுக்காக விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன மற்றும் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், சீருடைகள் வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் இவ்வகுப்பை சார்ந்த மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4. கள்ளர் சீரமைப்பு பள்ளிகள்

பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்த மக்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வண்ணம், இப்பிரிவு மக்கள் அதிகமாக வசிக்கும் மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் 298 பள்ளிகள் (213 தொடக்கப் பள்ளிகள், 22 நடுநிலைப் பள்ளிகள், 20 உயர்நிலைப் பள்ளிகள், 40 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள்) இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 27,279 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

| அரசு கள்ளர் பள்ளி மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | பள்ளிகளின் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப் பள்ளிகள் (15 தொடக்கப் பள்ளிகளில் LKG வகுப்பு உட்பட) | 213 | 4,974 | 4,787 | 9,761 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 22 | 885 | 834 | 1,719 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 20 | 1,281 | 1,050 | 2,331 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | 40 | 7,213 | 6,095 | 13,308 |
| 5. | உண்டு உறைவிடப் பள்ளிகள் | 3 | 80 | 80 | 160 |
| | **மொத்தம்** | **298** | **14,433** | **12,846** | **27,279** |

## கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை



## கடந்த 5 ஆண்டுகளில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மாணவ/மாணவியரின் எண்ணிக்கை விவரம்

| கல்வி ஆண்டு | மாணவ/மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|
| 2018-2019 | 24,895 |
| 2019-2020 | 24,544 |
| 2020-2021 | 24,912 |
| 2021-2022 | 27,607 |
| 2022-2023 | 27,279 |



கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியருக்கு அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம் மற்றும் காலணி ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புறத்தைச் சார்ந்த மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இன மாணவியருக்கு ஊக்கத் தொகையாக ஆண்டிற்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பு பயிலும்

மாணவியருக்கு ரூ.1,000 வீதமும் வழங்கப்படுகிறது. கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (smart classrooms) அமைத்துத் தரப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கென

வழங்கப்படும் இடைநிகழ் செலவினம் ரூ.1,000-லிருந்து ரூ.3,000 ஆக 2022-2023 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

**4.1 கள்ளர் சீரமைப்பு உண்டு உறைவிடப்பள்ளிகள்**

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு தரமான கல்வியை வழங்கும் பொருட்டு, மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள் 02.11.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளிகளில் 160 மாணவ / மாணவியர் சேர்க்கப்பட்டு, கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள், நூலகங்கள், விளையாட்டு கருவிகள்

ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மாணவர்களின் முழுமையான முன்னேற்றத்தினை கருத்திற் கொண்டு, அபாகஸ், யோகா, இசைக்கருவிகள் ஆகியவற்றிற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**4.2 கல்விச் சுற்றுலா**

2022-2023-ஆம் கல்வியாண்டில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் ரூ.42.16 இலட்சம் செலவில் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்பட்டனர். 1,757 மாணாக்கர்கள் இக்கல்விச் சுற்றுலாவில் பங்கேற்றனர்.

இக்கல்வி சுற்றுலா திட்டத்தின் கீழ், இராமநாதபுரம், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலாச்சார பாரம்பரியம் மிக்க இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் மாணவ, மாணவியர் அழைத்து செல்லப்பட்டனர்.

## 4.3 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வி

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மொத்தம் 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. 2021-2022-ஆம் ஆண்டில் ஒன்றாம் வகுப்பு நடைபெற்ற அனைத்து 225 பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பில்

ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், 2022-2023-ஆம் ஆண்டில், 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 9-ஆம் வகுப்பில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டன. இவ்வாங்கில வழி வகுப்புகளில் 2022 – 2023-ஆம் கல்வியாண்டில் 1,648 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். அவ்விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வகுப்புகள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப் பள்ளி மழலையர் (LKG) | 115 | 103 | 218 |
| 2. | தொடக்கப் பள்ளி மழலையர் (UKG) | 171 | 154 | 325 |
| 3. | 1 முதல் 5 ஆங்கில வழி | 197 | 206 | 403 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | 6 முதல் 9 ஆங்கில வழி | 349 | 353 | 702 |
| | **மொத்தம்** | **832** | **816** | **1,648** |

## 4.4 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

2022-2023 ஆம் ஆண்டில், கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூ.700 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 104 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டில், 234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் ரூ.468 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு பணிகள் நிறைவுற்றன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.142.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.5 நபார்டு வங்கி நிதி உதவியுடன் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

2021-2022 ஆம் ஆண்டில், 92 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆய்வகக் கட்டடங்கள், கணினி ஆய்வகம், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிவறைகள், ஆழ்துளை கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.5,009.18 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ஏற்படுத்த ஆணையிடப்பட்டது. 54 திட்டப் பணிகள்

முடிவுற்றுள்ளன மற்றும் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 4.6 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கற்பித்தல் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இதே போன்று, கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022-2023 கல்வியாண்டில் 430 ஆசிரியர்களுக்கு ரூ.24.70 இலட்சம் செலவில் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகளுக்காக செலவிடப்பட்ட ரூ.117.90 இலட்சம் உட்பட கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் நிருவாகத்திற்காக ரூ.14,620.89 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.15,313.52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை இடையூறின்றி தொடர ஏதுவாக பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு, இலவசக் கல்வி, பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி

நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. 2021 – 2022 ஆம் ஆண்டில் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 5.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

| கட்டணம் | தமிழ் வழி (அரசு/ அரசு உதவி பெறும்) | ஆங்கில வழி (அரசு/ அரசு உதவி பெறும்) |
|---|---|---|
| கற்பிப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| சிறப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| 10 ஆம் வகுப்பு தேர்வு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ஈடுசெய்யப்படுகிறது.<br><br>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது. |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 1,07,405 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.123.52 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 60,929 | 70.07 |
| மிபிவ/சீம | 46,476 | 53.45 |
| மொத்தம் | 1,07,405 | 123.52 |

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கான பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், 2021-2022-ஆம் ஆண்டுவரை 50 சதவீத நிதியுதவி

ஒன்றிய அரசினாலும் 50 சதவீத நிதியுதவி மாநில அரசினாலும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

தற்போது ஒன்றிய அரசின் திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சம் மற்றும் அதற்கும் குறைவாக உள்ள அரசுப் பள்ளிகளில் 9 மற்றும் 10-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.4,000 வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு கல்வி

உதவித்தொகை வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.106 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.4,439.40 இலட்சமும் என மொத்தம் ரூ.4,545.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

### 5.2.1 பள்ளி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

| கட்டணம் | தமிழ் வழி (அரசு/ அரசு உதவி பெறும்) | ஆங்கில வழி (அரசு/ அரசு உதவி பெறும்) |
|---|---|---|
| கற்பிப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| சிறப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஈடுசெய்யப்படுகிறது. |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 1,87,276 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.413.59 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 1,08,378 | 239.55 |
| மிபிவ/சீம | 78,898 | 174.04 |
| மொத்தம் | 1,87,276 | 413.59 |

### 5.2.2 பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்.

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி

நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், நபர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் ஆகும். 2022-2023 ஆம் ஆண்டில் 558 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.403.71 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பள்ளி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை மற்றும் ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.690 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.490 இலட்சமும் என மொத்தம் ரூ.1,180 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2.3. கல்லூரி மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (ஆன்லைன் வாயிலாக)

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகையினை பெற பெற்றோரது ஆண்டு

வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உள்ள அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், உண்டி, உறையுள் கட்டணமாக கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு

ரூ.175 என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ/பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 2021 - 2022 ஆம் ஆண்டு முதல் இக்கட்டணங்கள் அனைத்து படிப்புகளுக்கும் ஒரே அளவாக மாதம் ஒன்றுக்கு ரூ.400 ஆக உயர்த்தப்பட்டு, ஆண்டிற்கு (10 மாதங்களுக்கு) மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

## 6. இலவசக் கல்வி உதவித்தொகை

இத்திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கும்/ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயில்பவர்களுக்கும் / அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் தொழிற்படிப்பு பயில்பவர்களுக்கும் பின்வருமாறு கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

| கட்டணம் | பட்டப்படிப்பு | பட்டயப் படிப்பு | தொழிற்படிப்பு |
|---|---|---|---|
| கற்பிப்பு கட்டணம் | விலக்களிக்கப் பட்டுள்ளது | அரசு நிர்ணயித்த அளவில் | குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பவர்க ளுக்கு விலக்களிக்கப் பட்டுள்ளது |
| சிறப்பு கட்டணம் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் |
| திரும்ப பெற இயலாத கட்டாய கட்டண-ங்கள் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் | அரசு நிர்ணயித்த அளவில் |
| புத்தக கட்டணம் | கல்வித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள-வாறு | கல்வித் தொகை அறிவிக்கை-யில் குறிப்பிட்டுள்ளவாறு | கல்வித் தொகை அறிவிக்கை யில் குறிப்பிட்டுள் ளவாறு |
| தேர்வுக் கட்டணம் | முழுவதுமாக வழங்கப்படு-கிறது | முழுவதுமாக வழங்கப்படு-கிறது | முழுவதுமாக வழங்கப்படு-கிறது |
| நிபந்தனை-கள் | நிபந்தனைகள் இல்லை | பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு | பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 |

| | | | |
|---|---|---|---|
| | | மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் | இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் |

மேற்படி இக்கல்வி உதவித்தொகையுடன், கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.400 ஆக 2021 – 2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டு ஆண்டிற்கு (10 மாதங்களுக்கு) மொத்தம் ரூ.4,000 வழங்கப்படுகிறது.

## 6.1 இணையதளம் மூலம் கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.bcmbcscholarship.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) முறையில் மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படும்.

கல்லூரி மாணாக்கர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை, இலவச கல்வி உதவித்தொகை பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றின் திட்டங்களின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 4,53,488 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.19,093.25 இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 2,55,712 | 11,503.25 |
| மிபிவ/சீம | 1,97,776 | 7,590.00 |
| மொத்தம் | 4,53,488 | 19,093.25 |

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும்

சீர்மரபினர் இன மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், 2021-2022-ஆம் ஆண்டு வரை 100 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினால் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.11,903 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.7,590 இலட்சமும் என மொத்தம் ரூ.19,493 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. அரசு பள்ளிகளில் பயின்று 7.5 % இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ / மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல்**

மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளில் அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் சேரும் மாணவ/ மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 683 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.2,347.16 இலட்சம் ஈடு செய்யப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.3,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

பெண்களை மேம்பாடு அடையச் செய்வதில் கல்வியே முதற்படியாகும். கிராமப்புறங்களில் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண் குழந்தைகளிடையே கல்வி கற்பதை ஊக்கப்படுத்தவும் மற்றும் ஆரம்பக் கல்வியை இடையிலேயே கைவிடுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் 1999-2000 ஆண்டிலிருந்து, அரசு/ அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பில்

பயிலும் கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.1,000 வீதமும் ஊக்கதொகை வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 2,85,959 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.1,816.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.1,725 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

மேல்நிலைப்படிப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித வருமான உச்சவரம்பின்றி மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து பேருந்து கட்டணசலுகை பெறும் மாணாக்கர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. பள்ளி வளாகத்திலேயே

அமைந்துள்ள விடுதிகளில் தங்கி அதே பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணாக்கர்களுக்கு நடப்பு 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.22,126.53 இலட்சம் மதிப்பீட்டில் 4,35,624 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

| **துறை** | **மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை** | **தொகை (இலட்சம்)** |
|---|---|---|
| பி.வ | 2,25,004 | 11,425.78 |
| மி.ப.வ | 2,10,620 | 10,700.75 |
| **மொத்தம்** | **4,35,624** | **22,126.53** |

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.19,475.23 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.11,028.28 இலட்சமும் என மொத்தம் ரூ.30,503.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


## 10. விடுதிகள்

தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் கல்வி கற்பதை ஊக்குவிக்கவும் மற்றும் அவர்கள் கல்வியினை தொடரவும் 1332 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கான விடுதிகளை இத்துறை நடத்தி வருகிறது. மாணவ, மாணவியர் எவ்வித தடையின்றி தங்களின் கல்வியினை தொடர

இலவச உணவு மானியம், தங்கும் வசதி வழங்கப்படுகிறது. இத்துறையின் கீழ் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| **துறை** | **விடுதிகள்** | **விடுதிகளின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|
| | | **மாணவர்** | **மாணவியர்** | **மொத்தம்** |
| பிவ | கல்லூரி | 85 | 66 | 151 |
| | பள்ளி | 369 | 205 | 574 |
| | மொத்தம் | 454 | 271 | 725 |
| மிபிவ | கல்லூரி | 50 | 53 | 103 |
| | பள்ளி | 236 | 113 | 349 |
| | மொத்தம் | 286 | 166 | 452 |
| சீம | கல்லூரி | 13 | 9 | 22 |
| | பள்ளி | 87 | 46 | 133 |
| | மொத்தம் | 100 | 55 | 155 |
| கல்லூரி | | 148 | 128 | 276 |
| பள்ளி | | 692 | 364 | 1,056 |
| **மொத்தம்** | | **840** | **492** | **1,332** |

# விடுதிகளின் எண்ணிக்கை



# ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை

| வ. எண் | துறை | விடுதிகள் | மாணவர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 7740 | 5260 | 13000 |
| | | பள்ளி | 20940 | 11520 | 32460 |
| | | மொத்தம் | 28680 | 16780 | 45460 |
| 2 | மிபிவ | கல்லூரி | 4250 | 4765 | 9015 |
| | | பள்ளி | 12700 | 6225 | 18925 |
| | | மொத்தம் | 16950 | 10990 | 27940 |
| 3 | சீம | கல்லூரி | 1105 | 740 | 1845 |
| | | பள்ளி | 6814 | 3440 | 10254 |
| | | மொத்தம் | 7919 | 4180 | 12099 |
| கல்லூரி | | | 13095 | 10765 | 23860 |
| பள்ளி | | | 40454 | 21185 | 61639 |
| **மொத்தம்** | | | **53549** | **31950** | **85499** |

# அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை

| வ. எண் | துறை | விடுதிகள் | மாணவர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 6795 | 4323 | 11118 |
| | | பள்ளி | 16635 | 9427 | 26062 |
| | | மொத்தம் | 23430 | 13750 | 37180 |
| 2 | மிபிவ | கல்லூரி | 3533 | 4508 | 8041 |
| | | பள்ளி | 11665 | 5728 | 17393 |
| | | மொத்தம் | 15198 | 10236 | 25434 |
| 3 | சீம | கல்லூரி | 696 | 608 | 1304 |
| | | பள்ளி | 4783 | 2621 | 7404 |
| | | மொத்தம் | 5479 | 3229 | 8708 |
| கல்லூரி | | | 11024 | 9439 | 20463 |
| பள்ளி | | | 33083 | 17776 | 50859 |
| **மொத்தம்** | | | **44107** | **27215** | **71322** |

## ஒப்பளிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை




இவ்விடுதிகளில் 85,499 மாணவ, மாணவியர் தங்கிப் பயன்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான

வரம்பு 2021-2022 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக

ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி

மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர் --- 7
முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின்
குழந்தைகள்--- 3
கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள
மலைத் தோட்டங்களில் பணிபுரியும்
தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள்--- 227

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்குவதற்கு கல்லூரி மாணவியர்களின் மத்தியில் தேவை அதிகரித்ததைத் தொடர்ந்து, அவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பள்ளி

மாணவியர்களின் விடுதியில் காலியாக உள்ள இடங்களில் கல்லூரி மாணவியர்களை தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 430 கல்லூரி மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

2021-2022 ஆம் ஆண்டில், அனைத்து கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் "கலைத்திருவிழா" என்ற பெயரில் நடத்தப்பட்டன.

### 10.1 உணவுக் கட்டணம்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1,100 ஆகவும், ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில், விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுப் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டு, மாற்றம் செய்யப்பட்ட திருத்திய உணவுப் பட்டியல் 03.06.2022 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

விடுதி மாணவ/ மாணவிகளுக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டு, தைப்பொங்கல், குடியரசு தினம், தமிழ் புத்தாண்டு, சுதந்திரதினம் மற்றும் தீபாவளி ஆகிய நாட்களில் வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டு முதல் விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி

விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் இருமடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.29,001.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.18,780.10 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.14,742.60 இலட்சமும் என மொத்தம் ரூ.33,522.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

2. அனைத்து கல்லூரி விடுதிகளில் ரூ.259 இலட்சம் செலவில் "செம்மொழி நூலகங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. அனைத்து கல்லூரி விடுதிகளில் ரூ.202 இலட்சம் செலவில் E-Library அமைக்கப்பட்டுள்ளன.

4. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

6. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

7. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

8. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதற்கென வழங்கப்படும் இடைநிகழ்வு செலவினத் தொகை 2022-2023ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கு ரூ.1,000-லிருந்து ரூ.3,000 ஆக

உயர்த்தப்பட்டது.

9. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.
10. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.
11. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.
12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதார குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி

விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன், உடற்பயிற்சி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்படுகின்றன.

13. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன

14. மாணவ / மாணவியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

15. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

16. விடுதி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வண்ணம் காப்பாளர்/ காப்பாளினிகள் தங்கள் விடுதிகளை திறம்பட நடத்திட விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு ரூ.49.55 இலட்சம் செலவில் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

## 11. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் இவ்விடுதிகளில் சேர்வதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டது. அவர்களின்

உணவுச் செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 733 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ.70.59 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.41 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.46.79 இலட்சமும் என மொத்தம் ரூ.87.79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. விடுதிகளுக்கு பரிசுகள் வழங்குதல்

### (i) மாநில அளவிலான பரிசுகள்

விடுதிகளை செம்மையான முறையில் பராமரிப்பதற்கு விடுதி பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வகை | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | காப்பாளர்/ காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |
| 2. | காவலர் | 10,000 | 5,000 | 3,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் ஏவலர் | | | |
| 3. | சமையலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 4. | தூய்மைப் பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ.1.37 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.1.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) மாவட்ட அளவிலான பரிசுகள்**

விடுதிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நல விடுதிகளுள் 3 விடுதிகளையும், கள்ளர் சீரமைப்பு

விடுதிகளுள் 3 விடுதிகளையும் தேர்வு செய்து நினைவுப் பரிசும் காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு பரிசுகளும் வழங்கும் புதிய திட்டம் 2021-2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. காப்பாளர் / காப்பாளினிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.7.80 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குவதற்காக 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.7.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மொத்தமுள்ள 1,332 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் 1,254 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 78 விடுதிகள் வாடகை/வேறு அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 28 விடுதிகளுக்கு சொந்த கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 50 விடுதிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.2,303.46 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.406.99 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1,295.24 இலட்சம் என மொத்தம் ரூ.1,702.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப் பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக 2022–2023 ஆம் ஆண்டில்

ரூ.660 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 112 விடுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021-2022 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு ரூ.1,300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 145 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.693.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. சீருடைகள் வழங்குதல்

ஆண்டுதோறும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ,

மாணவியருக்கு 4 இலவச இணை சீருடைகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையால் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 30,118 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.357.47 இலட்சம் செலவிடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.250 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.159.14 இலட்சமும் என மொத்தம் ரூ.409.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 16.1 இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்குதல்

ஏழ்மை நிலையில் உள்ள சலவைத் தொழில் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு 1,085 பித்தளை தேய்ப்பு பெட்டிகள் ரூ.71.08 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.71.13 இலட்சம் தேய்ப்புப் பெட்டிகள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.2 நவீன சலவையக அலகுகள் அமைத்தல்

2022-2023 ஆம் ஆண்டில், 25 நவீன சலவையக அலகுகள் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படுவதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு நவீன சலவையகம் அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இதுவரை 4 நவீன சலவையக

அலகு அமைப்பதற்கு ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு நவீன சலவையகம் அமைப்பதற்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.3 இலவச மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு

வருமான வரம்பு ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு 3,000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வாங்கி வழங்கப்படும்.

2023-2024 ஆம் ஆண்டிற்கு மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்க ரூ.117.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**16.4 ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைத்தல்**

2022-2023 ஆம் ஆண்டில், 25 ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் ரூ.75 இலட்சம்

மதிப்பில் அமைக்கப்படுவதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இதுவரை 25 ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் அமைக்கும் திட்டத்திற்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17. இலவச வீட்டு மனை வழங்குதல்

வீட்டுமனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு சொந்தமாக அவர்கள் வீடு கட்டி கொள்வதற்காக இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.72,000-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 47 பயனாளிகளுக்கு ரூ.39.50 இலட்சம் செலவில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.150.02 இலட்சமும் என மொத்தம் ரூ.350.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக "சீர்மரபினர் நல வாரியம்", 2007 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு

செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதியுடையவர் ஆவர். இந்நலவாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 38,117 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 398 பயனாளிகளுக்கு ரூ.28.05 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை<br>விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | | 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. | கல்வி உதவித்தொகை | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய | 1,750 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | முறையான பட்டப்படிப்பிற்கு | |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை<br>(i) ஆண்களுக்கு<br>(ii) பெண்களுக்கு | <br>3,000<br>5,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 3,931 உறுப்பினர்களுக்கு ரூ.123.29 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தை சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த "வலையர் அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

## 19. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

"தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்" நரிக்குறவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கும், அவர்கள் மாற்று தொழில் புரிவதற்கான நிதியுதவி அளிப்பதற்கும், 2008 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா

தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. நரிக்குறவர் வகுப்பைச் சார்ந்த 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதியுடையவர் ஆவர்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் சுயதொழில் துவங்க நிதியுதவி

அளிக்கப்படுகிறது. தனிநபருக்கு தொழில் துவங்க ரூ.75,000 மானியமும், குழுவாக சேர்ந்து தொழில் துவங்க தனிநபர் மானியமாக ரூ.10,000 அல்லது குழுவிற்கு ரூ.1,25,000 மானியமாக பின் நிகழ்வாக வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.1,085 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் 234 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 16,010 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 190 பயனாளிகளுக்கு ரூ.12.78 இலட்சம்

செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| **வ. எண்** | **நிதி உதவிகள் விவரம்** | | **உதவித் தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1. | | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை | |
| | அ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 4. | கல்வி உதவித் தொகை | | |
| | அ) | 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 500 |
| | ஆ) | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 1,000 |
| | இ) | 10ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | உ) | 11ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஊ) | 12ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | எ) | 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஏ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |

| | | | |
|---|---|---|---|
| | ஐ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையானபட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 6,000 |
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஔ) | (i) ஐ .டி ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய ஐ டிஐ. அல்லது தொழில் பயிற்சி படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித் தொகை | |

| | | | |
|---|---|---|---|
| | | i)ஆண்களுக்கு<br>ii)பெண்களுக்கு | 3,000<br>5,000 |
| 6. | மகப்பேறு உதவித் தொகை | | |
| | அ) | மகப்பேறுமாதம் ஒன்றுக்கு :<br>1000.ரூ வீதம்<br>(6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /<br>கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக் கண்ணாடி<br>செலவுத் தொகையை<br>ஈடுசெய்தல் | 500வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம்<br>(மாதந்தோறும்) | 1,000 |
| 9. | அ) | தனிநபர் தொழில் தொடங்க<br>மானியம் | 7,500 |
| | ஆ) | குழுவாகத் தொழில்<br>தொடங்க மானியம் | 10,000<br>தனி<br>நபருக்கு<br>(அல்லது)<br>1,25,000<br>குழுவிற்கு |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 14,308 உறுப்பினர்களுக்கு ரூ.811.27 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

வன்னியகுல சத்திரிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக அரசால் 2009-

ஆம் ஆண்டில் “வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்” தோற்றுவிக்கப்பட்டது.

உயில் எழுதிய வன்னியகுல சத்திரிய சமுதாயத்தை சேர்ந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் வன்னிய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், அரசால் “தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம், 2018” இயற்றப்பட்டு, 04.02.2019 அன்று நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் 1 தலைவர், பதவிவழி உறுப்பினர்கள்

இருவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் மற்றும் 1 உறுப்பினர் செயலாளர் அடங்கிய தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் அரசால் உருவாக்கப்பட்டது. இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2022-2023 ஆம் ஆண்டில் அரசு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்தது. இவ்வாரியம் அமைக்கப்பட்டதில் இருந்து இதுவரை மொத்தம் 16 வாரியக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டில் புதிதாக 22 வன்னிய அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டு ஆக மொத்தம் 119 அறக்கட்டளைகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகள்

25 மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட அறக்கட்டளைகளுள் இதுவரை மொத்தம் 69 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள அறக்கட்டளைகளை பதிவு செய்ய இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளுள், இதுவரை 17 வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துப் பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் சொத்துப்

பட்டியலினை அரசிதழில் வெளியிட இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

சமூக நீதிக்காக மிகச் சிறந்த முறையில் பங்காற்றியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் நபர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விருது பெறுபவருக்கு விருது தொகையாக 1 இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வந்தது. இவ்விருதுத் தொகை 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.5.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி-எதிர்-இந்திய ஒன்றியம் என்னும் மண்டல் குழு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)இன்கீழ், கூறு 340 உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையம் 15.03.1993 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

தற்போதைய ஆணையம் உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் திரு வீ. பாரதிதாசன் தலைமையில், எட்டு உறுப்பினர்களுடன், மூன்று ஆண்டு காலத்திற்கு, 17.11.2022 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள அரசாணையின்படி ஆணையத்திற்கு கீழ்க்காணும் செயல்வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வுசெய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(3) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் சமுதாயங்களுக்கு, சமூக மற்றும் கல்வி ரீதியிலான

பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.

(4) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வகைப்பாடு மற்றும் உள்-வகைப்பாடு செய்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் மற்றும் தொடர்புடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆணையத்தின் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

(5) பல்வேறு சமுதாயங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நோக்கில், அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள

சமுதாயங்களின் தற்போதைய நிலையை ஆராயத் தக்க புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஆணையம் தனிப்பட்ட ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

சி.ஏ. எண்.2600/2022 என்ற வழக்கில், 31.03.2022 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கூடுதல் செயல்வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

## 23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. 1982 ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் பதிவுபெற்ற ஒரு அரசுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி.

இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி. இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப் பெறுகிறது.

### 23.1 கடன் திட்டங்கள்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தனி நபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான

பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது . தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி / கூட்டுறவு நகர வங்கி / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

### 23.1.1 பொது காலக் கடன் திட்டம்

பொதுக் காலக் கடன் திட்டத்தின் கீழ், குறைந்த வட்டி விகிதத்தில் சிறு வர்த்தகம் / வணிகம்,

விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள், கைவினை பொருட்கள் மற்றும் மரபுவழிச் சார்ந்த தொழில்கள் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|---|
| 1 | ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | 3ஆண்டு முதல் 8 ஆண்டுகள் வரை | ரூ.3 இலட்சம் |
| 2 | ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 7% | | |
| 3 | ரூ.10 இலட்சம் முதல் ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 8% | | |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 91 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 576 பயனாளிகளுக்கு ரூ.756.35 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**23.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்**

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெண்கள் சிறு வணிகம் செய்வதற்கு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ரூ.2 இலட்சம் வரை | 5% | 3 முதல் 8 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 554 பயனாளிகளுக்கு ரூ.320.35 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் வணிகம் /செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 4% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 13,663 பயனாளிகளுக்கு ரூ.8,728.44 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் வணிகம் செய்வதற்கு /

.கடன் வழங்கப்படுகிறது ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 5% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 121 பயனாளிகளுக்கு ரூ.89.84 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.5 கறவை மாடுக் கடன்

பொதுக்கால கடன் திட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000 வீதம் அதிகபட்சம் ரூ.60,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| ரூ.60,000 (2 கறவை மாடுகளுக்கு) | 6% | 3 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 99 விழுக்காடாக உள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 237 பயனாளிகளுக்கு ரூ.67.54 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் மொத்தம் 15,151 பயனாளிகளுக்கு ரூ.9,962.52 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.11,656 இலட்சம் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் பங்கு தொகை ரூ.11,000 இலட்சம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்

பங்குத்தொகை ரூ.656 இலட்சம்) அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 23.2 சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

இதுவரை 5,821 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.2,760.60 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு சிறு குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியம் வழங்குவதற்கு ரூ.450 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரம் என அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் அடைவதை தனது தத்துவமாகவும், கொள்கையாகவும் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. இவ்வகுப்பினரின்

முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியாக திகழும் இடஒதுக்கீட்டு கொள்கையினை அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இவ்வகுப்பினரின் வாழ்வை மேம்பாடு அடைய செய்யும் வகையில் இவ்வரசு தொடர்ந்து செயலாற்றும்.

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**
**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

# இணைப்பு

## 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 930.62 | - | 0.01 | 930.63 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 3250.90 | - | - | 3250.90 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 57954.92 | 407.01 | - | 58361.93 |
| மிகப்பிற்படுத்தப்-பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 56702.13 | 3422.19 | - | 60124.32 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்-டோர் ஆணையம் | 129.89 | - | - | 129.89 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 88.35 | - | - | 88.35 |
| சிறுபான்மையினர் நலன் | 3612.72 | 31403.73 | - | 35016.45 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 108.60 | - | - | 108.60 |
| **மொத்தம்** | **122778.13** | **35232.93** | **0.01** | **158011.07** |



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 02.11.2022 அன்று கள்ளர் சீரமைப்பு உண்டு உறைவிடப்பள்ளிகள், வகுப்பறை கட்டடங்கள் , ஆய்வகங்கள், இரண்டு விடுதி கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.11.2022 அன்று சென்னை கொளத்தூரில் ரூ.7.75 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அரசு பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்



மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் அமைச்சர் அவர்கள் முன்னிலையில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர். அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இயங்கிவரும் விடுதிகளில் மாணவ / மாணவியருக்கு திருத்தம் செய்யப்பட்ட உணவு பட்டியலின்படி புதிய உணவு வகைகளை 03.06.2022 அன்று திருவல்லிக்கேணியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் வழங்கி துவக்கி வைத்தார்கள்.



துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 06.01.2023 அன்று ஆய்வு கூட்டம் நடைபெற்றது

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்



பெண்களுக்கான நுண் கடன் திட்டம்-புடவை வியாபரம்
கடன் தொகை - ரூ.6 இலட்சம்



பொது காலக்கடன் திட்டம் ஆயத்த ஆடையகம்
கடன் தொகை-ரூ.5.7 இலட்சம்




ஆண்களுக்கான நுன் கடன் திட்டம்-கணினி மையம்
கடன் தொகை - ரூ.75,000



மானியத்துடன் கூடிய நீர்ப்பாசன வசதி
மானிய தொகை - ரூ.50,000




மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இராமநாதபுரம் மாவட்டத்தில்
29.12.2022 அன்று மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கினார்கள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை, நுங்கம்பாக்கம், ஆண்கள் மேல்நிலை பள்ளியில்
மாணவ / மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கி, மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.